## 4. SGSY

### 4.24 வள்ளுவர் கோட்ட வளாகத்தில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் வணிக வளாகம் அமைத்தல்

---

வருவாய் (நி.மு.4–1) துறை

அரசாணை (நிலை) எண். 302 நாள் : 12.06.2000

படிக்க :

1. ஊரக வளர்ச்சி இயக்குநர், கடித எண்.100431/எஸ்.ஜி.எஸ்.ஒய்/99, நாள்.20.01.2000
2. அரசுக் கடிதம் எண்.47519/எஸ்.ஜி.எஸ்.ஒய்/99–4/ஊரக வளர்ச்சித்துறை/நாள்.23.02.2000
3. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கடித எண்.எம்.2/4471/2000/நாள்.27.03.2000

**ஆணை**

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் முக்கிய வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற ஏழை மக்கள், குறிப்பாக பெண்களைக் கொண்டு சுய உதவிக்குழுக்கள் அமைத்து, அக்குழுக்களுக்கு தொழில் மேற்கொள்ளும் பொருட்டு மான்யத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, இடைத்தரகர் இன்றி விற்பனை செய்ய வசதிகளை ஏற்படுத்தித்தர, மாவட்டந்தோறும் ஒரு கண்காட்சி அரங்கமும், வணிக வளாகமும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல, மாநிலத் தலைநகரமான சென்னையின் முக்கிய நகர்ப் பகுதியிலும், நிரந்தரக் கண்காட்சி அரங்கம் மற்றும் வணிக வளாகத்தினைஅமைத்தால், கிராமப்புற ஏழை மக்கள் செய்யும் உற்பத்திப் பொருட்களுக்கு, நல்ல விற்பனை வாய்ப்புகள் ஏற்பட்டு அவர்களின் வருமானம் பெருக வாய்ப்புகள் ஏற்படும் எனக் கருதப்படுகிறது.

2. மேற்கண்ட கருத்திற்கிணங்க, ஊரக வளர்ச்சி இயக்குநரை கலந்து அறிக்கை கோரி பெறப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர், தனது அறிக்கையில் ''ஊரக உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி அரங்கு மற்றும் வணிக வளாகத்தினை அமைக்க வள்ளுவர் கோட்டத்தின் பின்புறம், செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு ஏக்கர் இடத்தினை, ஊரக வளர்ச்சித்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்தோ அல்லது 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்தோ ஆணைகள் பிறப்பிக்கலாம் என்றும், மேற்படி இடத்தில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாநில அளவில், மத்திய அரசு நிதியுதவியுடன் வணிக வளாகத்தினையும் அமைப்பதற்கான வடிவமைப்பு ஒப்புதல் அளிக்க வேண்டும்'' என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலம் 'திறந்த வெளி மற்றும் பொழுது போக்கு' இடம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தெரிவித்துள்ளார்.

3. இச்செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலினை செய்தது. சென்னை வள்ளுவர் கோட்டத்தின் பின்பகுதியில் உள்ள, செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில், ஊரக உற்பத்திப் பொருட்கள் கண்காட்சி மற்றும் வணிக வளாகம் அமைப்பதற்கு ஏதுவாக ஊரக வளர்ச்சித் துறைக்கு முறையான நிலமாற்றம் முன்மொழிவினை எதிர்நோக்கி முன்நுழைவு செய்ய அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது. வணிக வளாகம் அமைக்கும் பொழுது, இவ்வளாகத்தில் எழுப்ப இருக்கின்ற புதிய கட்டிடங்கள், வள்ளுவர் கோட்டத்தின் கட்டிட அமைப்பை ஒட்டி, வள்ளுவர் கோட்டத்தின் எழில்மிகு தோற்றம் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் அமைய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு நிதியுதவியுடன் வணிக வளாகம் அமைக்க, நடவடிக்கை எடுக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேற்படி நிலத்தினை முறையாக ஊரக வளர்ச்சித்துறைக்கு நிலமாற்றம் செய்வதற்கு உரிய செயற்குறிப்பினை, சம்மந்தப்பட்ட துறையுடன் கலந்து பரிசீலனை செய்து, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மூலமாக அரசுக்கு அனுப்புமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தேவேந்திரநாத் சாரங்கி**
அரசு செயலாளர்